# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,219 — 1960 ඔක්තෝබර් 28 වැනි සිකුරාදා — 28.10.1960

12,219 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 663 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாநுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 663 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டம் 4 (1) ம் பிரிவின் கீழுள்ள கட்டளை

கட்டளை இலக்கம் 157

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், ரிக்கிறி பண்டா இலங்கரத்தின வர்த்தக வியாபார, உணவு, கப்பற்பகுதி அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால், எச்செம்மறியாட்டையோ, வெள்ளாட்டையோ, எவ்வொருவரோ உணவு அதிகாரியால் வழங்கப் படும் உத்தரவுடனும் அவ்வுத்தரவுக்கிணங்கியும் அல்லாது இலங்கைக்குள் இறக்குமதி செய்யக்கூடாது எனத்தடைவிதிக்கிறேன்.

ரி. பி. இலங்கரத்தின,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்பகுதி
அமைச்சர்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு அக்டோபர் மீ 20 ந் உ.
10–744.

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### துவக்கு முதலியவற்றின் 1961 ம் ஆண்டுக்குரிய அனுமதிச் சீட்டுப் புதுப்பித்தல்—மாத்தளை மாவட்டம்

இத்தால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில் மாத்தளை மாவட்டத்தில் உள்ள பிரிவுகளின் காரியாதிகாரிகள் தங்கள் தங்கள் பிரிவுகளில் பாவிக்கப்படும் கைத் துப்பாக்கி, சுழற் துப்பாக்கி தவிர்ந்த ஏனைய அனுமதிச் சீட்டுகளை 1960 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ம் திகதி யிலிருந்து புதுப்பிப்பார்கள். கைத்துப்பாக்கி சுழற் துப்பாக்கி ஆகிய வற்றின் அனுமதிச் சீட்டுக்கள் அதே திகதி தொடக்கம் மாத்தளைக் கச்சேரியில் புதுப்பிக்கப்படும்.

2. 1960 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் அனுமதிச் சீட்டுக்களைப் புதுப்பித்தல் நலம். துவக்கு முதலியவைகளைக் காரியாதிகாரிகள் முன்னும், கைத்துப்பாகி முதலியவற்றை என் முன்னிலையிலும் பரிசோதனைக்காகக் கொண்டு வருவதுடன் 1960 ம் ஆண்டுச் சீட்டுக்களையும் அவ்விடத்தில் ஒப்படைக்கவேண்டும்.

3. 1960 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்குப்பின்னர் வரும் புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் இரண்டு மடங்கு கட்டணங் களுடனேயே ஏற்றுக் கொள்ளப்படும். 1961 ம் ஆண்டிற்கு அனுமதிச் சீட்டுகளை புதுப்பிக்க விரும்பாதவரும் கெட்டுப்போன துவக்கு முதலிய வற்றை உடையவரும் 31.12.60 ம் திகதிக்கு முன்னர் தம் துவக்கு முதலியனவற்றைக் காரியாதிகாரியிடமோ என்னிடமோ ஒப்படைக்க வேண்டும்.

4. இவ்வருடத்தைய அனுமதிச் சீட்டு ஒப்படைக்காவிட்டால் அனுமதிச் சீட்டுக் கட்டணத்துடன் மேலதிகமான ரூபா 1 தொலைந்துபோன அனுமதிச் சீட்டின் நிதிக்காகச் செலுத்தப்படவேண்டும்.

5. 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் திகதிக்குள் 1961 ம் ஆண்டு அனுமதிச் சீட்டுக்களைப் பெறுதவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

வி. பி. ஏ. பெரேரா,
அரசாங்க அதிபரும், அனுமதிச்
சீட்டுக் கொடுப்பவரும்.

மாத்தளைக் கச்சேரி,
1960 ம் ஆண்டு அக்டோபர் மீ 20 ந் உ.
10–768.